# 7

# அத்தஹாரத் - 1

## நீரும் நஜீஸும்

'சுத்தம் ஈமானின் பகுதியாகும்' என்பது நபி மொழியாகும். இஸ்லாம் சுத்தத்தை வலியுறுத்துகின்ற மார்க்கமாகும். இஸ்லாத்தில் சுத்தம் இபாதத் களோடு பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கின்றது. அர்கானுல் இஸ்லாத்தில் அடங்குகின்ற இபாதத்களும், ஏனைய இபாதத்களும் ஏற்றுக்கொள்ளப் படுவதற்கான ஒரு முக்கிய நிபந்தனையாக இஸ்லாம் எசுத்தத்தைக் கருதுகின்றது. அதனால் தான் சுத்தமாக இருப்போரை அல்லாஹ்வும் விரும்புகின்றான் என அல்குர்ஆன் கூறுகின்றது. அகமும் புறமும் சுத்தமாக இருப்பது 'அத்தஹாரத்' எனப்படுகிறது.

பொறாமை, வஞ்சகம், பெருமை, கபடம், அகங்காரம், முகஸ்துதி போன்ற துர்க்குணங்களிலிருந்து உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதை அகச்சுத்தம் எனப்படுகிறது. அல் குர்ஆன் ஓதுதல், திக்ர் செய்தல், தஸ்பீஹ் செய்தல், பாவ மன்னிப்புக் கோரல், ஸலவாத் கூறுதல் போன்றன உளச் சுத்தத்தை ஏற்படுத்தும் நல்லமல்களாகும்.

நஜீஸ்களிலிருந்து உடல், உடை, வாழிடம், சுற்றாடல் என்பவற்றைச் சு த்தமாக வைத்திருப்பது புறச்சுத்தம் எனப்படுகிறது. முஸ்லிம்கள் எப்போதும் சுத்தம் பேண வேண்டியது கட்டாயமாகும். புறச்சுத்தம் பேணுவதற்கு நஜீஸ் களிலிருந்து தூய்மையாகி இருப்பது அவசியமாகும். நஜீஸை அகற்றும் முறையை அடிப்படையாகக்கொண்டு அது மூன்றாகப் பிரித்து நோக்கப்படுகிறது.

1. கடுமையான நஜீஸ்
2. சாதாரண நஜீஸ்
3. இலகுவான நஜீஸ்

### கடுமையான நஜீஸ்

நாய், பன்றி என்பவற்றின் உமிழ்நீர் இதற்கான உதாரணமாகும். இந்த வகை நஜீஸை சுத்தம் செய்வதற்கு ஏழு முறை தண்ணீர் ஊற்றிக் கழுவ வேண்டும். அதில் முதலாவது முறையில் சுத்தமான மண்ணைப் பயன்படுத்த வேண்டும்.

### சாதாரண நஜீஸ்

இரத்தம், செத்த பிராணிகள், வாந்தி, மதுபானம், மலம், சலம், வாய்க்கோழை போன்றன இவ்வகையில் அடங்கும். இதனை (மாஉன் தஹுர்) பரிசுத்தமான நீரால் கழுவி சுத்தம் செய்ய வேண்டும். இதற்காகச் சலவைத் தூள் அல்லது சவர்க்காரம் போன்றவற்றையும் பயன்படுத்தலாம்.

### இலகுவான நஜீஸ்

இரண்டு வயது பூர்த்தியடையாத, தாய்ப்பாலை மட்டும் உணவாக உட்கொள்கின்ற ஆண் குழந்தையின் சிறுநீர் இதில் அடங்கும். இதனைச் சுத்தம் செய்வதற்கு நீரை அதன் மீது தெளிப்பது போதுமானது.

## நீரும் அதன் வகைகளும்

தண்ணீர் அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட அருட்கொடையாகும். மனிதன் தன்னைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு நீர் அவசியமாகும். அதன் தன்மையையும் கொள்ளவையும் பொறுத்து நீர் மூன்று வகையாகப் பிரிக்கப் படுகின்றது.

1. மாஉன் தஹூர் (பரிசுத்தமான நீர்)
2. மாஉன் தாஹிர் (சுத்தமான நீர்)
3. மாஉன் நஜஸ் (அசுத்தமான நீர்)

### மாஉன் தஹூர் (பரிசுத்தமான நீர்)

இவ்வகை நீர், இயல்பால் சுத்தமானதாகும். அதனால் அசுத்தங்களைச் சுத்தம் செய்வதற்கு இவ்வகை நீரே பயன்படுத்தப்பட வேண்டும். குளித்தல், வுழூச்செய்தல், நஜீஸ்களைத் துப்பரவு செய்தல் போன்ற தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும். கடல் நீர், மழை நீர், குளத்து நீர், ஆற்று நீர், ஊற்று நீர், கிணற்று நீர் போன்றன இவ்வகை நீருக்கான உதாரணங்களாகும்.

### மாஉன் தாஹிர் (சுத்தமான நீர்)

இவ்வகை நீர் சுத்தமானதாக இருந்தாலும் சுத்தப்படுத்தும் தன்மையற்றதாகக் காணப்படும். இவை பருகுவதற்கும் சமைப்பதற்கும் மட்டும் பயன்படும். தேநீர், கோப்பி, இளநீர், பன்னீர், குளிர்பானம் போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

### மாஉன் நஜஸ் (அசுத்தமான நீர்)

210 லீற்றரை விடக் குறைவான, நஜீஸான பொருட்கள் கலப்பதன் மூலம் நிறம், சுவை, மணம் என்பன மாற்றமடைந்த நீர் இவ்வகையில் அடங்குகின்றது. இதனை முன்னர் குறிப்பிட்டது போன்ற எவ்விதத் தேவைகளுக்கும் பயன்படுத்தக்கூடாது. மதுபானவகைகள், சாக்கடை நீர், சிறுநீர் போன்றன இதற்கான உதாரணங்களாகும்.

**பயிற்சி**

1. நஜீஸின் வகைகளை உதாரணங்களுடன் தருக.

2. பின்வரும் நீர்வகை எவ்வகையைச் சார்ந்தவை என இனங்கண்டு அட்டவணையைப் பூரணப்படுத்துக.

   (மழை நீர், மதுபானம், குளத்து நீர், கோப்பி, ஆற்று நீர், பன்னீர், கள் (பதநீர்), இளநீர், சாராயம், கடல் நீர், சாக்கடை நீர், தேநீர்)

| பரிசுத்தமான நீர் | சுத்தமான நீர் | அசுத்தமான நீர் |
|---|---|---|
| | | |

3. சுத்தம் பேணுவதன் அவசியம் யாது?

4. சுத்தமாக இருப்பதன் நோக்கம் யாது?

5. இஸ்லாம் கூறும் சுத்தங்கள் யாவை?

6. உள்ளத்தை சுத்தப்படுத்தும் விதம் யாது?

7. புறச் சுத்தம் பேணுவதற்குப் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு யாது?

8. பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| நஜீஸ்கள் | சுத்தம் செய்யும் முறை |
|---|---|
| 1. நாய் நக்கிய பாத்திரம் | |
| 2. இரண்டு வயது பூர்த்தியாகாத பால்குடிக்கும் குழந்தையின் சிறுநீர் பட்ட ஆடை | |
| 3. இரத்தம் தோய்ந்த ஆடை | |
| 4. மலம், சலம் பட்டுவிட்ட ஆடை | |
| 5. மதுபானம் கொட்டப்பட்டுள்ள தரை | |